அணியில் சாய் கிஷோர் (ரூ.10 லட்சம்), டி.நடராஜன் (ரூ.12

யம நடத்திய எந்த போட்டி... ளிலும் ஆடாதவர்கள் உள்ளூர்



## தென்மண்டல ஆக்கி போட்டி:

# சென்னை பல்கலைக்கழக அணி சாம்பியன்

திருச்சி, டிச.31-

தென்மண்டல பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான மாணவிகளுக்கான ஆக்கி போட்டி திருச்சி அண்ணா ஸ்டேடியத்தில் கடந்த 5 நாட்களாக நடந்தது. இதன் காலிறுதி போட்டிகளில் கோவை பாரதியார் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், மைசூரு பல்கலைக்கழகம் மற்றும் காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம். அணிகள் வெற்றி பெற்று அரையிறுதி லீக் போட்டிகளுக்கு முன்னேறின. இந்நிலையில் நேற்று அரையிறுதி போட்டிகள் நடந்தன. போட்டிகளின் முடிவில் சென்னை பல்கலைக்கழக அணி 3 போட்டிகளில் விளையாடி 2 வெற்றி மற்றும் ஒரு டிராவுடன் புள்ளிகள் அடிப்படையில் முதலிடத்தை பிடித்து சாம்பியன் பட்டத்தை வென்றது. 2-வது இடத்தை மைசூரு பல்கலைக் கழக அணியும், 3-வது இடத்தை கோவை பாரதியார் பல்கலைக்கழக அணியும், 4-வது இடத்தை எஸ்.ஆர்.எம். அணியும் பெற்றன. பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வம் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகளை வழங்கினார்.

அரங்கேறிய லீக் ஆட்டத்தில் நார்த் ஈஸ்ட் யுனைடெட் எப்.சி. 3-0 என்ற கோல் கணக்கில் நடப்பு சாம்பியன் மும்பை சிட்டிக்கு அதிர்ச்சி அளித்தது. பந்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும் (65.2 சதவீதம்), அதிகமான ஷாட்டுகள் அடிப்பதிலும் (13 ஷாட்) மும்பை வெகுவாக ஆதிக்கம் செலுத்திய போதிலும் அதிர்ஷ்டக்காற்று நார்த் ஈஸ்ட் பக்கமே வீசியது. அந்த அணியில் அலாடினே அஜாராய் (முதலாவது மற்றும் 82-வது நிமிடம்), லூயி நிக்சன் (86-வது நிமிடம்) ஆகியோர் கோல் போட்டனர். மும்பைக்கு எதிராக நார்த் ஈஸ்ட் அணி கடைசியாக ஆடிய 7 ஆட்டங்களில் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். நடப்பு தொடரில் இதுவரை 13 ஆட்டங்களில் விளையாடி இருக்கும் நார்த் ஈஸ்ட் அணி 6 வெற்றி, 3 டிரா, 4 தோல்வி என 21 புள்ளிகளுடன் 4-வது இடத்தில் உள்ளது. மும்பை சந்தித்த 3-வது தோல்வியாகும். போட்டியில் இன்றும், நாளையும் ஓய்வு நாளாகும்.

# ஐ.சி.சி. சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் விருது பட்டியலில் பும்ரா




துபாய், டிச.31-

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஆண்டுதோறும் பல்வேறு பிரிவுகளில் சிறந்த வீரர், வீராங்கனையை தேர்வு செய்து விருது வழங்கி கவுரவித்து வருகிறது.

இதன்படி இந்த ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரருக்கான விருது இறுதிபட்டியலில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா, இங்கிலாந்து பேட்ஸ்மேன்கள் ஜோ ரூட், ஹாரி புரூக், இலங்கையின் காமிந்து மெண்டிஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் இருந்து ஒருவர் வாக்குகமிட்டி மற்றும் ரசிகர்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் விருதுக்கு தேர்வு செய்யப்படுவார். இந்த ஆண்டில் 13 டெஸ்டுகளில் விளையாடி 71 விக்கெட்டுகள் கைப்பற்றி இருக்கும் பும்ரா, அதிக விக்கெட் எடுத்த பவுலராக திகழ்கிறார். உள்ளூர் மட்டுமின்றி கடினமான வெளிநாட்டு சீதோஷ்ண நிலையிலும் ஒரே மாதிரி சிறப்பாக பந்து வீசி வருவதாக ஐ.சி.சி. அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளது.

ஜோ ரூட் இந்த ஆண்டில் அதிக ரன் எடுத்த வீரர்களில் (17 டெஸ்டில் ஆடி 6 சதம் உள்பட 1,556 ரன்) முதலிடத்தில் உள்ளார். ஹாரி புரூக்கை எடுத்துக் கொண்டால், பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் முச்சதம் அடித்து சாதனை படைத்தவர். காமிந்து மெண்டிஸ் குறைந்த டெஸ்டில் அதிவேகமாக ஆயிரம் ரன்களை கடந்த சாதனையாளர்களின் பட்டியலில் ஜாம்பவான் டான் பிராட்மேனுடன் 3-வது இடத்தை பகிர்ந்தவர். அதனால் 4 பேரில் யாருக்கு விருது கிடைக்கும் என்பதை கணிப்பது கடினம்.